## 18.8 கிராமப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக குழல் விளக்குகளுடன் கூடிய தெருவிளக்குகள் நிறுவுதல்

ஊரக வளர்ச்சி (தி 3) துறை

அரசாணை ( 2 டி) எண் 151 நாள் : 14.8.2001

**ஆணை**

சோடியம் ஆவி தெரு விளக்குகள் அமைப்பதால் விளக்குகள் மற்றும் அதன் பொருத்திகளின் விலை குழல் விளக்குகளைக் காட்டிலும் பன்மடங்கு கூடுதலாக இருப்பதோடு இதற்கான மின்சார உபயோகக் கட்டணமும் அதிகமாகிறது.

2. 16.7.2001 அனறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஊரக வளர்ச்சித்துறையின் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்யும்போது கிராமப்புறங்களில் தெருவிளக்குகள் அமைக்கும் நேர்வுகளில் சோடியம் ஆவி விளக்குகளுக்குப்பதிலாக குழல் விளக்குகளை மட்டுமே (Tube Light instead of Sodium Vapour Lamp) அமைக்கவேண்டும் எனவும் இதற்கான நிதியினை சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யலாம் எனவும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

3. அரசு தீவிர பரிசீலனைக்குப்பின்பு, கிராமப்பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக குழல் விளக்குகளுடன் கூடிய தெரு விளக்குகள் மட்டுமே நிறுவப்படவேண்டும் என ஆணையிடுகிறது. மேலும் இதற்கான நிதியினை சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்குட்பட்டு, சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக்குழு மானியத்திலிருந்தோ மேற்கோள்ளலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

4. இந்த ஆணை நிதித் துறையின் அ.சா.கு. எண் 2306/FS/P/2001, நாள் 2/7/2001 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**என். கோவிந்தன்**
அரசு செயலாளர்